REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 2உ செவ்வாய் (15—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 3உ புதன் (16—3—55) [இதழ் 233

உயர்தர தொழில் நுணுக்க கல்விக்கூடம் தமிழ் நாட்டில்தானா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தென் பகுதியில் ஒரு உயர்தர தொழில் நுட்பக் கல்விக்கூடத்தை நிறுவுவது பற்றி சென்னை நிதி மந்திரி எழுதியுள்ள கடிதம் குறித்து விவாதிப்பதற்காக, டில்லி மக்கள் சபை, மேல் சபையில் உள்ள சென்னை மாநில உறுப்பினர்கள் ஒன்றுகூடினர்.

அந்த கல்விக்கூடத்தை தமிழ் நாட்டில் நிறுவ வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, இரு சபைகளின் உறுப்பினர்கள் சிலர் கொண்ட தூதுக்குழு ஒன்று பிரதமர் நேருவைச் சந்திப்பது என்று முடிவானதாம்.

இடதுசாரி கூட்டு முன்னணிக்கு முற்றுப்புள்ளி

தோல்வி மேல் தோல்வி கிடைத்தபின் தோன்றிய புத்தறிவு!

முன்னணியை உருவாக்கிய கட்சியே உருக்குலைக்கிறது!

திருவாங்கூர்-கொச்சி கம்யூனிஸ்டு கட்சியின் குளறுபடி

திரு-கொச்சியில் நடைபெற்ற சட்டசபை தேர்தலின்போது, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக கம்யூனிஸ்டு கட்சி, இடதுசாரி கூட்டு முன்னணியை உருவாக்கியது. அக்கூட்டிற்கு கம்யூனிஸ்டு கட்சியே முழுப் பொறுப்பாகும்.

ம. சோ. கட்சி, கேரள சோஷலிஸ்டு கட்சி, புரட்சிகர சோஷலிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு கட்சி ஆகிய நான்கு கட்சிகள் மேற்படி முன்னணியில் கூட்டாக இருந்தன.

முன்னணிக்கு பதவி கிடைப்பது முடியாது எனத் தெரிந்தவுடன், ம. சோ. கட்சியின் தலைவரான பட்டம் தாணு, முன்னணியை விட்டு விலகி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பதவிக்காக எதையும் செய்யலாம் என்ற திடநம்பிக்கை கொண்டுள்ள ஒருவரை கூட்டு சேர்த்துக் கொண்டதும், அவர் தலைமையில் பதவியைக் கைப்பற்ற கம்யூனிஸ்டு கட்சி முயற்சித்ததும், அரசியல் செயல் திறமோ அல்லது வெறும் சந்தர்ப்ப செயல் முறையோ, எவர் அறிவர்?

ம. சோ. கட்சி வெளியேறிவிட்டதும், முன்னணியின் எண்ணிக்கை குறையத் தொடங்கிற்று. அதன் பிறகு புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியும் கூட்டிலிருந்து பிய்த்துக் கொண்டது.

அதுவரை ம. சோ. கட்சிக்கு ஆதரவு காட்டிவந்த தி கொ. காங்கிரஸ் கட்சி ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டதும், மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சி பதவிநாதரான பட்டத்தின் கூட்டுறவிற்கு பேரம் நடத்திற்று. முதல் அவநம்பிக்கைத் தீர்மானத்தின்போது காங்கிரசிற்கு எதிராக பட்டத்தைத் தாங்கி நிற்பது எனும் தீவிர முடிவுடன் கம்யூனிஸ்டு கட்சி இருந்தது. அக்காரணத்தினாலேயே, இராஜப்பிரமுகர் உரையின்மீது கொடுத்திருந்த திருத்தத்தை மூச்சுப் பேச்சில்லாமல் திரும்பப் பெற்றுக் கொண்டது கம்யூனிஸ்டு கட்சி.

இரண்டாம் முறையில் அவநம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறிவிடும்; அதற்கான எண்ணிக்கை பலம் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது என்ற உண்மை வெளிப்படையாகத் தெரிய வந்ததும், பொருத்தமற்ற எது எதையோ புகலாகக் கூறிக்கொண்டு, பட்டம் தாணுவை ஆதரிக்கும் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, 'மரப்பாச்சி' போன்று கம்யூனிஸ்டுக் கட்சி இருந்துவிட்டது.

பட்டத்தைப் பதவியிலமுத்திப் பிடித்துக்கொண்டு, அவரைத் தம் விருப்பப்படி ஆட்டிப்படைக்க வேண்டும் என்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் 'முற்றின அரசியல் யூகம்' பயனளிப்பதற்கான வாய்ப்பில்லாதுபோகவே, முன்னணியையே மூடிவிடுவது என்ற முடிவிற்கு வந்துவிட்டது தி. கொ. கம்யூனிஸ்டு கட்சி. கம்யூனிஸ்டு கட்சிச் செயலின் உள்ளடக்கம் அறியாது, நட்பை இறுதிவரை நம்பிக்கிடந்த கேரள சோஷலிஸ்டு கட்சியைக் கலக்காமலே, முன்னணியைக் கலைத்துவிட்டிருக்கிறது கம்யூனிஸ்டு கட்சி.

என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்? என்ற இலாப வேட்டையில் கருத்தாக இருக்கிற ஒரு கட்சியுடன், கூட்டு சேருவது—கூடிச் செயல்படுவது—எத்தகைய விளைவை மற்ற அரசியல் கட்சிகளுக்கு உண்டாக்கும் என்பதற்கு தி. கொ. கம்யூனிஸ்டு கட்சியின் 'துரோகம்' சிறந்ததோர் படிப்பினையாகும்.

முன்னணியின் மூடுவிழாவைத் தனித்த பொறுப்பில் கம்யூனிஸ்டு கட்சி நடத்தி இருப்பதைக் கண்ட மேற்படி முன்னணியின் இயக்கியாக இருந்த கேரள சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஜான் மஞ்சூரான், ஆயாசப்படுகிறார்—ஆத்திரப்படுகிறார்.

கூட்டு முன்னணியின் பெயரால் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற கம்யூனிஸ்டு கட்சியினர், தங்கள் சட்டசபை பதவியைத் துறந்துவிட்டு, கம்யூனிஸ்டு கட்சியின் பெயரால் தேர்தலுக்கு நிற்கட்டும்; மீண்டும் ஒரு ஆந்திரா, தி. கொ.-வில் ஏற்படுவது நிச்சயம்' என மஞ்சூரான் தி. கொ. கம்யூனிஸ்டு கட்சிக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

'நாய் விற்ற காசு குரைக்குமா?' என்ற கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் நியாயத்தை இதுவரை மஞ்சூரான் தெரிந்து கொள்ளவில்லையானாலும், இனியாவது தெரிந்து கொள்வார் என்பதில் ஐயமில்லை.

கவர்னர் மீது குண்டுவீச்சு

தென் வியட்நாம் கவர்னர் ட்ரான் வான் லாம் என்பவரை கொலை செய்ய நடைபெற்ற முயற்சியில் அவர் உயிர் தப்பினாரென்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

கவர்னரின் காருக்குள் ஒரு கைக் குண்டு வீசப்பட்டதாயும், அவர் அப்போது தமது அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்ததாயும் தெரியவருகிறது.

கவர்னரும், மெய்க்காப்பாளரும் காரிலிருந்து வெளியே குதித்தவுடன் குண்டுவெடித்து காரைச் சிதற அடித்ததாம்!

கம்யூனிஸ்டு கட்சித் தலைமை அலுவலகம் தாக்கப்பட்டது!

இத்தாலியில் பாசிஸ்டுகள் ஆர்ப்பாட்டம்

ரோம், மார்ச் 15—

இங்குள்ள இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சித் தலைமை காரியாலயத்தை நியோ-பாசிஸ்டு கட்சியைச் சேர்ந்த சுமார் 50 பேர்கள் தாக்கி சேதப்படுத்தினர் என்று தெரிகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டு வெடிகுண்டுகளை, கட்டிடத்தில் இருந்த சன்னல் வழியாக வீசினராம். கம்யூனிஸ்டு கட்சி புத்தகங்களை விற்பனை செய்துகொண்டிருந்த கடையைச் சூறையாடி, அந்தப் புத்தகங்களையும் தீயிட்டுக் கொளுத்தினராம்.

அதை ஒட்டி அந்த நியோ-பாசிஸ்டு கட்சியைச் சேர்ந்த 27 இளைஞர்களைப் போலீசார் விசாரணைக்காகக் கைது செய்து காவலில் வைத்திருந்தனர். பின்னர் ஆறு பேர்களை விடுவித்து விட்டனர் என்றும் தெரிகிறது.

அஞ்சுகின்றனர்!

தென்னாப்பிரிக்காவில் வெள்ளை சிப்பந்திகள் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், இப்பிரச்சினை, தென்னாப்பிரிக்க வெள்ளையரின் வருங்காலத்தையும், அவர்களது அதிகாரத்தை இங்கு நிலைநாட்டி வருவதைத் தீவிரமாகப் பாதிக்கும் வகையிலும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

3,000 ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

ம. பி. சர்க்கார் போக்கை எதிர்த்து நடவடிக்கை

நாகபுரி, மார்ச் 14—

மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 3,000 இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள், ஏற்கனவே முடிவு செய்து அறிவித்திருந்தபடி, 'மெட்ரிகுலேஷன்' பரீட்சை துவங்கிய இன்றைய தினத்தில், அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மாநில ஆசிரியர்கள் சங்கம் இந்த வேலை நிறுத்த முடிவை சில நாட்களுக்கு முன் மேற்கொண்டது.

சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளிலும், இதர பள்ளிகளிலும், கல்விக்கூட நடைமுறைச் சட்டங்கள் அமுல் செய்யப்படவில்லை என்றும், சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவி சாய்க்கவில்லை என்றும் அந்த ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்டியிருந்தது.

இப்போது, 104 இடங்களில், சுமார் 22,000 மாணவர்கள் பரீட்சை எழுதி வருகின்றனராம். பரீட்சையில் ஒத்துழைப்பதில்லை என்ற அந்த ஆசிரியர்களின் முடிவு பொறுப்பற்றதும், தவறானதுமாகும் என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

பரீட்சைகளை மேற்பார்வையிடுவதில் சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுடன், இதர சர்க்கார் அலுவலக சிப்பந்திகளும் உதவி வருகின்றனர் என்று தெரிகிறது.

எப்படித்தான் மனம் வந்ததோ?

ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம்

சென்னை, மார்ச் 14—

"வரும் 1955 ஏப்ரல் 1-ந் தேதி முதல் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, சம்பளத்தில் கால்பங்கு உபகாரச் சம்பளம் (பென்ஷன்) கிடைக்கும்," என்று கல்வி மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

எல்லா வகை ஆரம்பப் பாடசாலைகளிலும் வேலை செய்யும் எல்லா தர ஆசிரியர்களுக்கும் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆசிரியர்களுக்கும் இந்த உபகாரச் சம்பளம் கிடைக்கும் என்று தெரிகிறது.

"பென்ஷனுடன் கூட பிராவிடண்ட் நிதி திட்டமும் இப்போதுபோலவே இருக்கும்" என்றும் மந்திரி சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

ஆண்டொன்றுக்கு 7,50,00,000 பேர்

மலேரியாவால் பாதிக்கப்படுகின்றனர்

ஒவ்வொரு ஆண்டிலும் இந்தியாவில் 7½ கோடி மக்கள் மலேரியாவினால் பாதிக்கப்படுகிறார்களெனவும், 1952-க்குப் பின்னர், இந்நோய் மேலும் அதிகரிக்கவில்லையெனவும் டெல்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

20 லட்சம் குஷ்டரோகிகள்!

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சுமார் 20 லட்சம் குஷ்டரோகிகள் இருப்பதாக யூனியன் சர்க்கார் மந்திரி ராஜ்குமாரி அமிர்த கௌரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'சோஷலிசம் மாதிரி' என்பது அர்த்தமற்றது

தாண்டன் தரும் 'சர்டிபிகேட்!'

புதுடில்லி, மார்ச் 13—

"மக்களின் வாழ்க்கைத் தரங்களில் உள்ள வேறுபாடுகள் குறுக்கிக் குறைக்கப்பட்டாலன்றி, 'சோஷலிசம் மாதிரி' சமூக அமைப்பு என்ற குரல் அர்த்தமற்றதாகும்,"

என்று காங்கிரஸ் முன்னாள் தலைவரான புருஷோத்தமதாஸ் தாண்டன் கூறியிருக்கிறார்.

கடந்த வெள்ளியன்று மக்கள் சபைத் தலைவர் ஜி. வி. மாவ்லங்கர் துவக்கிவைத்த அரிசன சேவை ஊழியர் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் அம்மாதிரி குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல் சட்ட திருத்த மசோதா

நேரு தரும் விளக்கம்

"சமூக அமைப்பை மாற்ற விரும்பினால், சொத்துக்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளும்போது பூரண நஷ்டஈடு கொடுக்க முடியாது; நாம் அமைக்க விரும்பும் புதிய சமுதாயத்தில், ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு அதிகம் இருக்கக்கூடாது."

இவ்வாறு, அரசியல் சட்டத் திருத்த மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு விடுமாறு கோரும் பிரேரணையை, மக்கள் சபையில் சமர்ப்பித்து, பிரதமர் நேரு பேசுகையில் விளக்கியிருக்கிறார்.

"சொத்துக்களை நஷ்டஈடு கொடுக்காமல் பறிமுதல் செய்வது இந்த திருத்தத்தின் நோக்கமல்ல," என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—3—55 செவ்வாய்

எவராலும் இயலாது!

நல்லவர் உள்ளம் கொதிக்கச் செய்யும், நாட்டவர் கவனம் திருப்பும் செய்தி! செய்தியா அது? அல்ல! செந்தேள்! வெந்தணல்! வேகச் சீறும் வேதனைப் புயல்!

நாட்டு மக்கள் மட்டுமின்றி நாடாள்வோரும் திறந்த மனதுடன் எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்று.

தமிழ், திராவிடரின்—தமிழரின் உயிர்! வாழ்வு! வளம்!—எல்லாம்!

'தாய் மொழியாம் தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்'—தமிழர் பாடும் பரணி இது.

'வாழ்வு இன்பங்கள் நிறைந்ததுதான்; ஆனாலும் தமிழ் எமது இன்னுயிரினும் இனிது'! என்று அந்தத் தமிழ் காக்க தம்முயிரையே ஈந்த தாளமுத்து—நடராசன் பரம்பரையினர் தமிழர்—திராவிடர்.

அந்த வீரப் பரம்பரையின் உயிரினும் இனியதாம் உயர்தனிச் செம்மொழியான தமிழ், தருக்கர் சிலரால் முத்தமிழ்ச் சங்கம் நிறுவி முக்கலை வளர்த்த மதுரை மாநகரில் இகழப்பட்டதாம். அதுவும், தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர் எழுப்பிய மீனாட்சி அம்மையின் திருக்கோவிலில்! வேதனையான வேடிக்கையாயிருக்கிறதா?

தமிழ்த்தாய் பெற்றெடுத்த வற்றாத கருத்தூறும் கருவூலங்களுள், வள்ளுவர் செய்த திருக்குறளும் ஒன்றாகும்.

திருக்குறள், தேடற்கரிய தெள்ளமுது; அள்ள அள்ளக் குறையாத கருத்துச் சுரங்கம்; உலகத்தவர் உள்ளத்தில், இதுவரையும்—இனிமேலும் ஊறிய—ஊறவிருக்கும் உணர்வுகளுக்குத் தத்துவங்கூறும் பேராசிரியன்!

அந்தக் குறள்—'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று மாற்றாராலும் ஏற்றிப் போற்றப்படும் திருக்குறள்—மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இடம்பெற வேண்டும் என்றெண்ணி தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர், 1330 குறட்பாக்களையும் சலவைக் கல்லில் பொறித்து அந்தக் கோவிலின் நாற்புறச் சுவர்களிலும பதிப்பித்துத்தர, தாம் சித்தமாக இருப்பதாகக் கூறினாராம்.

தமிழரின் வாழ்க்கை முறை—தமிழ் மறை—திருக்குறள், மக்களால் மறுவற நன்குணரப் படவில்லை. ஒரு குலத்துக்கொரு நீதி கற்பிக்கும் ஆதி மனுவேதம் மக்களின் உள்ளத்தை ஆட்கொண்டிருக்கிறது. 'இந்த இழிநிலை மாற எண்ணுவரோ மக்கள் குறளை' என ஏங்கிக் கிடந்த நல்லவர்கள் கொதிப்படையும வகையிலும், 'தாழ்வுற்றோம், வாழ்விழந்தோம், ஆரிய ஆதிமனுத்தத்துவத்தால், வாழ்வு பெறுவோம் வள்ளுவன் வழியால்' என்று புத்துணர்வும் பகுத்தறிவும் பெற்றுவரும் நாட்டு மக்களின் கவனத்தைத் திருப்பும் வகையிலும், திருப்பனந்தாள் ஆதினத் தலைவரின்வரவேற்கவேண்டிய நற்பணி 'தேவையில்லை; திருக்குறள் ஏன் திருவாலவாயன் திருத்தலத்தில்?' என்று கேட்கின்றனராம் சில திருமேனிகள், கோவில் ஆலோசனைக் குழுவிலிருந்து கொண்டு.

திருக்குறள் ஏன் என்று கேட்கப்படுகிறது இந்த இருபதாம் நூற்றாண்டில்—மதுரையில், மீனாட்சி அம்மன் கோவிலில்!

மீனாட்சி அம்மன் கோவில் ஆடி வீதியில் வெள்ளிக்கிழமை தோறும் ஏறுமயிலேறி விளையாடிய ஆறுமுகத்தோன் புகழ்பாடி பக்தர்களுக்கு திருப்புகழ் அமிர்தம் தன்னை வாரி யார்களைக் கொண்டு வாரி வழங்க அனுமதி உண்டு.

தேவார பஜனையும் திவ்வியப் பிரபந்த உபந்நியாசமும் நாள் தோறும் நடைபெற அனுமதி உண்டு.

அறுபத்து மூன்று நாயனார்களும் செய்த அற்புதங்கள் அழகு வண்ண ஓவியமாக கோவிலின் உள்ளும் புறமும் விளக்கிக்காட்டப்பட்டுள்ளன.

ஆனாலும் தெள்ளு தமிழ்த் தேனும் திருக்குறள் அங்கு இடம்பெறக்கூடாதாம்—கூறுகிறார்களாம் அப்படி, சில கூர் மழுங்கிய குறுகிய புத்தியினர்.

'ஆரியமாவது, திராவிடமாவது; எல்லாம் இரண்டறக் கலந்துவிட்டது,' என்கின்றனரே சில விரிந்த நெஞ்சினர். அவர்களுக்கு இக்கூற்று புலப்படுத்தவில்லையா செத்து மடியவில்லை இன்னும் ஆரியம் என்பதை?

நடமாடும் நாசம், நாட்டவரைப் பிடித்துள்ள காசம்—அதுதான் ஆரியம் தனக்கே உரித்தான நச்சுத் தன்மையை எப்படிஎல்லாம் வெளிக்காட்டி வருகிறது என்பதற்கு, திருக்குறளுக்கு இடமில்லை என்று செந்தேளென வந்துள்ள செய்தி ஒரு எடுத்துக்காட்டு!

ஆரியக் கலாச்சாரம் விதைத்த விதையின் விளைவு தானே இன்று இந்தச் சமூகத்தில் நிலவும் விபரீதங்கள்?

தமிழ் மொழியை அழிக்க முயன்றது ஆரியம் அன்று. முடியவில்லை; சிதைக்க மட்டுமே முடிந்தது.

சிங்காரத் தமிழின் சில அங்கங்களை எரிக்க மட்டுமே முடிந்தது—பெரும் தமிழ்க் காவியங்களில் சிலவற்றை மறைக்க மட்டுமே முடிந்தது.

வழக்கொழிந்த வடமொழி போல் தமிழ் செத்துவிடவில்லை; என்றும் சீரிளமைத் தமிழாகவே இருந்தது; ஆரியத்திற்கு சீற்றத்தைத் தந்து கொண்டு.

பின்னரும், இனிமைத் தமிழை இழிவைக் கூட்டியும், இனிமையைக் குறைத்தும், உயிரை நீட்டியும், பெய்யை வாட்டியும், வேண்டா வெறுப்பாக, மேற்கொண்டு மொழிந்து வந்தது ஆரியம்.

ஆனாலும் அழியவில்லை, அழியாத அழிக்கமுடியாத தமிழ்.

அங்கும் அந்தத் தொத்து நோய்!

பூனா நகரக் காங்கிரஸ் கட்சியிலும், மற்றெல்லா இடங்களையும் போலவே பிணக்கும், பிளவும் தோன்றியுள்ளது.

கடந்த பிப்ரவரி 27-ந் தேதியன்று கட்சி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தல் செல்லத்தக்கதல்ல என்று நகரக் குழு உறுப்பினரான ஜி. யூ. கோஷ்தி, காங்கிரஸ் தேர்தல் 'டிரிபியூனலு'க்கு எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

வரவு-செலவுக் கணக்கு, ஆண்டறிக்கை ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் பிரச்சினை அட்டவணையில் இடம் பெற்றிருக்கவில்லை என்றும், கணக்கு கேட்கப்பட்டபோது அவை இன்னும் தணிக்கை செய்யப்படவில்லை என்றும் அந்த உறுப்பினரிடம் கூறப்பட்டதாம்.

கடந்த இரண்டாண்டுகளாகவே வரவு-செலவுக் கணக்குகள் நகர செயற்குழுவிடம் தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறப்பட்டது; எனவே, தேர்தல் கூட்டம் செல்லத்தக்கதல்ல என்று அந்த உறுப்பினர் வாதாடுகிறாராம்.

இந்தியாவில், 1954-ம் ஆகஸ்டில், டீசல் எஞ்சின்கள் உற்பத்தி இரு மடங்குக்கும் அதிகமாக இருந்தது. 1953-ம் ஆண்டில் 3,176 டீசல் எஞ்சின்கள் உற்பத்தியாகியிருக்க, அடுத்த ஆண்டில் 8,652 டீசல் எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

மொழி மேலே விழிவைத்தே வாழ்வோம் என்று தமிழர் இழந்திருந்த விழிப்புணர்வை மீண்டும் பெற்றுவிட்டிருக்கிற இந்தக் காலத்திலா வீரியம் இழந்துவிட்ட ஆரியம் மீண்டும் வஞ்சகக் காரியங்களில் ஈடுபடுவது!

'கோவிலில் திருக்குறள் ஏன்?' என்று கேட்கிறார்களாம் ஆரியக் கலாச்சார மோகிகள். கேட்கமாட்டார்களா பின்?

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'—'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக வையகமியற்றியான்' என்று கோவில்கள் எழும்பியுள்ள அடிப்படைத் தத்துவங்களைச் சாடும் அறநெறி மணம் வீசும் தீந்தமிழ்ச் சோலையாம் திருக்குறள், ஆரிய சனாதன தருமம் என்ற மனிதகுல விரோதத் தத்துவங்கள் எனும் புழுக்கள் நிறைந்த பழமைச் சாக்கடையின் ஓடுகாலாய், அதில் அகப்பட்ட மக்களை தன் முடைநாற்றத்தால் வாட்டி வாட்டிக் கொல்லும் கொலைக்களமாய்க் காட்சி தரும் கோவிலில் இருக்கக்கூடாததுதான்.

'திருக்குறள் இடம் பெற்றால், திருத்தல புராணங்களின் மகிமை என்னாவது; அந்த மகிமையைக் கூறியே மடமையில் உழலும் மக்களை ஏய்த்து வாழும் ஆரியத்தின் வாழ்வு என்னாவது?' என்ற கலக்கம் போலும், குறள் கூடாதென்பதற்குக் காரணம்.

என்னவானாலும் திருக்குறள், மீனாட்சி அம்மன் கோவில் போன்ற திருத்தலங்களில் மட்டுமின்றி, மக்கள் கூடும் இடமெல்லாம் இடம் பெறும் காலம் வரத்தான் போகிறது. அதைத் தடுத்துவிட எவராலும் இயலாது என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அரேபியக் கதையை நினைவூட்டும் கம்யூனிஸ்டுகள் போக்கு!

நிலச் சீர்திருத்தம் மட்டுமே மக்களின் கண்ணீரைத் துடைக்கும் மருந்தாகுமா?

வேலூரில் தோழர் ஈ. வெ. கி. சம்பத்

(நேற்றைய தொடர்ச்சி)

"இந்தத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுகள் தோற்றதற்கு மற்றுமோர் தத்துவ ரீதியான காரணமும் கூறலாம்.

"அராபியக் கதைகளில் வரும் சுல்தான் ஒருவன், 'காலை எழுந்தது முதல் மாலைவரை ஓடிக்கொண்டே இரு; எவ்வளவு இடம் நீ ஓடுகிறாயோ, அவ்வளவும் உனக்கு,' என்று கூறியதைக் கேட்டு, ஓடி ஓடிச் செத்தான் என்பதைப் போல, கம்யூனிஸ்டுகள், மக்களிடத்தில் அளவறிந்து தங்கள் தேர்தல் திட்டங்களை வைக்கவில்லை.

"சென்ற பொதுத் தேர்தலின் போது, கம்யூனிஸ்டுகள், விவசாயிகளிடத்தில், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், $5\frac{3}{4}$ ஏக்கர் நிலம் ஆளுக்குக் கிடைக்கும்; நிலம் மட்டும் போதுமா என்ன? நல்ல மாடுகள் இரண்டு தருவோம்; இவை இரண்டும் மட்டும் போதாதே! கலப்பையும், ஏரும், கொழுவும் தருவோம்,' என்றெல்லாம், இடத்திற்கும் மக்களின் ஏமாளித்தனத்திற்கும் தகுந்தமாதிரி, தேர்தலின் போது, தேர்தல் உறுதிமொழிகளை அள்ளி வீசினார்கள்; அது கேட்டு, அவதியுற்றிருந்த மக்கள், கம்யூனிஸ்டுகளுக்கு வாக்குகளை வாரித் தந்தார்கள்; ஆனால் ஆட்சி முறையும், அதுபற்றிய விபரங்களும் அறியாத மக்கள், கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் அமரவில்லை என்பதைக்கூட உணர்ந்துகொள்ளாததுடன், எதிர்பார்த்தபடி நடக்காதது கண்டு ஏமாற்றமடைந்தார்கள்; மனம் புழுங்கினார்கள்; விளைவு, அடுத்துவந்த தேர்தலின் போது கம்யூனிஸ்டுகள் யாரைப் பயங்கர எதிரிகள் என்று சித்தரித்துக் காட்டினார்களோ அந்த மனிதர்களுக்கே தங்களின் வாக்குகளைத் தந்து கம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்து, வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவது தவறுடையதாகாது என்று கருதுகிறேன்.

"விவசாயிகளின் இன்னல் நீங்க, கம்யூனிஸ்டுகள், விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட வேண்டுமென்கிறார்கள்; காங்கிரஸ்காரர்கள்கூட இன்று நிலச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறார்கள்.

"ஒரு தனி மனிதனிடத்தில் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் என்று நிலம் குவிந்திருப்பதும், நிலமே இல்லாது எண்ணற்ற மக்கள் தவிப்பதும் பெரும் கொடுமைதான்; அதை ஒழித்து அந்த நிலங்களை எல்லோருக்கும் பங்கிட்டுத் தர வேண்டியதுதான்; ஆனால், அதுவேதான் விவசாயிகளின் கண்ணீர் துடைக்கும் பரிகாரமாகிவிடுமா?

"நிலங்களைத் தனி மனிதர்களிடத்திலிருந்து பிடுங்கி எல்லா மக்களுக்கும் தருவது என்பது, 'நாட்டில் உள்ள ஒரு சமூக அநீதியை ஒழிக்கிறோம்' என்ற வரையில்தான் சரியாகுமே தவிர, அதுவே விவசாயிகளின் கண்ணீர் துடைக்கும் மருந்தாக இருக்க முடியாது.

"இன்று நாட்டில் உள்ள மொத்த நிலங்களைப் பிரித்துத் தந்தால், ஆளுக்கு 5 ஏக்கர் அல்லது அதற்கு சற்றுக் குறைவாகக் கிடைக்கலாம்; ஆனால், அந்த நிலம், இரண்டு மூன்று தலைமுறைகளில் மிகக் குறுகிய துண்டுகளாகப் போய்விடுமே! அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

"அப்படியானால், 'நிலச் சீர்திருத்தம் தேவை இல்லையா?' என்றால், தேவைதான்; அதுவும், உடனடியாகத் தேவை; ஆனால், அதுவே விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பரிகாரமாகிவிடும் என்று யாராவது கூறினால், அவர்கள் முதல்தரமான அரசியல் பித்தலாட்டக்காரர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

"பின் என்னதான் பரிகாரத்திற்கு வழி?' என்றால், விவசாயத்தையே வாழ்க்கைக்கு வழி என்று நம்பிக் கிடக்கும் 100-க்கு 70 பேராக உள்ள மக்களின் எண்ணிக்கையை 100-க்கு 60, 50 என்று படிப்படியாகக் குறைத்தாகவேண்டும்; அவர்களுக்கு வேறு வேலை தந்தாகவேண்டும்.

"வேறு வேலை, தொழில் வளர்ந்தால்தான் கிடைக்கும்; தொழில் வளர்ச்சியின் அளவை அதிகரித்து விவசாயத்தை நம்பிக் கிடப்பவரின் எண்ணிக்கையைக் குறைத்தால்தான் மக்களின் கண்ணீர் துடைக்கப்பட முடியும்.

"அப்படி தென்னாட்டில் தொழில் வளரச் செய்ய, இப்போதுள்ள வடநாட்டு ஏகாதிபத்தியம் சம்மதிக்காது என்பதை முன்பே நான் எடுத்துக்கூறியிருக்கிறேன்.

"ஆகவேதான் திராவிட நாடு கோரிக்கை—'அடிமையாயிருக்கிறோம்,' என்ற வெறும் மானத்தை மட்டும் பற்றிய அரசியல் பிரச்சினையல்ல—தம் வாழ்வு பறிபோகிறது என்ற பெரும் பொருளாதாரப் பிரச்சினை என்பதையும் கம்யூனிஸ்டு நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்."

3 குண்டுகள் போதுமாம்!

'இரண்டு, அல்லது மூன்று நீர் வளிக் குண்டுகள் இருந்தால் போதும்—மக்கள் நெருக்கடி மிகுந்த பிரிட்டனை அழிப்பதற்கு"

என்று, சோவியத் ஆசிரியர் ஒருவர் எச்சரித்திருக்கிறாராம்.

இல்யா எஹ்ரன் பர்க் என்ற அந்த ஆசிரியர், "எங்களிடம் எத்தனை குண்டு, அல்லது அமெரிக்காவிடம் எத்தனை குண்டு என்பதை நான் எண்ணிச் சொல்லவில்லை; சர்ச்சில்கூட அப்படி கணக்கிட்டிருக்கமாட்டார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நகர தண்ணீர் வினியோகத் திட்டங்கள்

நகரங்களில் தண்ணீர் வினியோகத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் ரூ 12 கோடி கடன் அனுமதித்துள்ளதெனத் தெரிகிறது.

தரப்படும் இக்கடன் தொகையை சுலபமான தவணைகளில் மாநில சர்க்கார்கள் திருப்பிச் செலுத்தலாமாம்.

இத்திட்டங்களுக்காகும் செலவில் பாதித் தொகை ரூ. 6-கோடிக்கு மேற்படாமலிருக்குமானால் அதை (பாதித் தொகையை) மத்திய சர்க்காரே மானியமாகக் கொடுக்குமாம்.

அண்மையில், ரூ 50 லட்சம் செலவில் சுமார் 200 பிரசவ, குழந்தைகள் பராமரிப்பு விடுதிகள் ஏற்படுத்தும் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

டெல்லி மேல் சபையில்

★

'பாஸ்போர்ட்' வழங்கும் அலுவல்

"'பாஸ் போர்ட்டு' வழங்குவது சம்பந்தமான அலுவல்கள் யாவும் மத்திய சர்க்கார் நிர்வாக அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனவா?" என்று கேட்கப்பட்டபோது, பிரதமர் நேரு பண்டிதர், நிர்வாக சௌகரியத்தை உத்தேசித்து, 'பாஸ் போர்ட்டு'கள் வழங்குவது சம்பந்தமான அலுவல்களையெல்லாம் மாநில சர்க்கார்களிடமிருந்து மாற்றித் தாங்கள் மேற்கொள்ளுவது நலமென மத்திய சர்க்கார் கருதியதால், மத்திய சர்க்காரின் நேரடியான மேற்பார்வையின்கீழ், புதுடில்லி, சென்னை, பம்பாய், நாகபுரி, கல்கத்தா ஆகிய இடங்களில் ஐந்து பிராந்திய காரியாலயங்களை நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது என்றும், புதுடில்லியிலும், சென்னையிலும் அக்காரியாலயங்கள் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டு வேலை செய்து வருகின்றன என்றும் இதர காரியாலயங்கள் கூடிய சீக்கிரம் திறந்து வைக்கப்படும் என்றும் கூறினர்.

ரூ. 100 கோடி பெறுமான அகதிச் சொத்துக்கள்!

இந்தியாவில் முஸ்லிம்கள் விட்டுச் சென்ற அகதிச் சொத்துக்களில், நகர் சுற்றுப்புறச் சொத்துக்கள், கிராம வீடுகள், விவசாய நிலங்கள் ஆகியவை அடங்கியுள்ளன என்றும், நஷ்டஈட்டுத் திட்ட விவகாரங்களுக்காக, அத்தகைய நகர்ச் சுற்றுப்புறச் சொத்துக்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 100 கோடி இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளதென்றும், இதர வகையான சொத்துக்களின் பெறுமான மதிப்பீடு எதுவும் இதுவரை கணக்கிடப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு இராணுவத்தில் இந்தியக் குடிமகன்?

"இந்தியாவிலுள்ள முன்னுள் பிரெஞ்சுப்பிரதேசங்களைச் சேர்ந்த இந்தியக் குடிகள், பிரெஞ்சு இராணுவத்தில் ஊழியம் செய்வதற்காக, பிரெஞ்சு சர்க்காரால் திரட்டப்பட்டு வருவது உண்மைதானு?" என்று கேட்கப்பட்டபோது, "இந்தியா – பிரெஞ்சு ஒப்பந்தத்தின் 4-வது பிரிவின்கீழ் பிரெஞ்சுப் பிரதேசங்களின் சட்டபூர்வமான நிர்வாக அதிகார மாற்றம் ஏற்படுவதற்கு முன்னதாக, பிரெஞ்சுக் குடியுரிமையையோ, இந்தியக் குடியுரிமையையோ தெரிந்தெடுப்பதற்கு, அப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிமை இருக்கும்; அவ்வாறு, குடியுரிமையைத் தெரிந்தெடுக்கும் வரையில், அவர்கள் சட்டரீதியாகப் பிரெஞ்சுக் குடிகளாகவே இருந்து வருவார்களாகையால், அவர்கள் பிரெஞ்சு சர்க்காரின்கீழ் ஊழியம் செய்ய விண்ணப்பித்துக்கொள்ளலாம்," என்று பதிலளிக்கப்பட்டது.

ரூ. 2½ இலட்சம் இடைக்கால நிவாரணம்!

பாகிஸ்தானில் விட்டுவந்த தபால் நிலைய சேமிப்புப் பாங்கிக் கணக்குகள், ரொக்கப் பத்திரங்கள் ஆகியவற்றிற்காக, இந்தியாவில், உரிமை மனுக்கள் செய்து கொண்டுள்ள இடம் பெயர்ந்தோருக்கு இடைக்கால நிவாரணமாக, 2·50 லட்சம் ரூபாய் வரை அளிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் மொத்தம் 59,038 ரேடியோ பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன 1953-ம் ஆண்டில், மொத்தம் 56,270 பெட்டிகள்தான் உற்பத்தி செய்யப்பட்டன.

கிராமத் தொழில்களின் அபிவிருத்திக்காக 1954-55-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில் இந்திய சர்க்கார் சகாயத் தொகையாக ரூ. 41,22000 கடனுக ரூ. 36,47,000 வழங்கினர்.

பிணியைப் போக்கவும் அருமருந்தாகிறது அணுசக்தி

புற்று நோய் சிகிச்சைக்கு உதவக்கூடும்.

புற்றுநோய் என்பது ஒரு நாட்டுக்கு உரியதல்ல; ஒரு இனத்தாருக்கு உரியதல்ல; ஒரு மொழியினருக்கு உரியதல்ல! உலகின் எந்தப் பாகத்திலிருந்தாலும், 'உமக்கு புற்று நோய் வந்திருக்கிறது' என மருத்துவர் சொன்னதும், கவலை கொள்ளாதார் எவருமிரார்! இந்தக் கவலையை கருவறுக்க அணுசக்தி ஆராய்ச்சி ஒரு புது நம்பிக்கை ஊட்டுகிறது.

இன்ன நோய்தான் இருக்கிறது என்று கண்டு பிடிப்பதற்கு 'எக்ஸ் ரே'யும், மைகிராஸ்கோப்பும் எவ்வளவு அனுகூலமாக வந்தனவோ, அவைபோல், இன்று, 'ரேடியோ ஐஸடோப்பு'களும் கிடைத்திருக்கின்றன.

இந்தக் கதிரியக்க ஐஸடோப்புகளை மனிதனின் உடலிலும், மிருகங்களின் உடலிலும், தாவரங்களிலும் செலுத்தினுல் அவை செல்லும் இடங்களைக் கண்டுபிடிக்க வசதியிருக்கிறது.

தைராய்டில் புற்றுநோய் கண்டால் எவ்வாறு சிகிச்சை செய்கிறார்கள் என்று பார்ப்போம். நோயாளிக்கு முதலில் கதிரியக்கமுள்ள 'அயோடின்' கொடுக்கிறார்கள்; இந்த அயோடின், புற்றுநோய் வளர்ச்சியுள்ளஇடத்தை அடைந்து அவ்வளர்ச்சியை ஒடுக்குகிறது. அங்கிருந்து வெளிப்படும் கதிரியக்கத்தின் அளவை, 'கெய்கர் எண் கருவி' போன்ற ஒரு கருவியால் கணக்கிடுகிறார்கள்; இதனுல் புற்றுநோய் எந்தெந்த இடத்தில், எவ்வளவு எவ்வளவு என அறியப்படுகிறது இவ்வாறு எந்தஇடத்தில் புற்று வளர்ச்சி இருக்கிறது எனக் கண்டுபிடித்ததும் கதிரியக்கமுள்ள கோபால்டின் கதிர்களை நோய் கண்ட இடத்தில் படும்படி செய்து குணமாக்குகிறார்கள். இவ்வாறு குணமடைந்தோர் இதுவரை பலராவர்.

இறந்தவர் உடலை அறுத்து 'இன்ன காரணத்தால் இறந்தார்' என்று கண்டுபிடிக்கும் பிணப் பரிசோதனை 1964க்குப்பிறகு இராது என்று அமெரிக்க வைத்திய வல்லுனர் கூறுகின்றனர். கதிரியக்கமுள்ள ஐசடோப்புகளை நோயாளியின் உடம்பினுள்செலுத்தி அவன் உயிருடன் இருக்கும்போதே அவனுக்கு இன்ன நோய் என்று கண்டுபிடித்துவிடுவார்கள் என அவர்கள் சொல்கிறார்கள்.

இருதயம், நுரையீரல், மண்ணீரல், ஈரல் இவற்றின் இரத்த ஓட்டத்தைப் பற்றி இதுவரை ஆராய்ந்தறியாதவற்றை இனி கதிரியக்க ஐஸடோப்புகளின் உதவியால் அறியலாம். இதுவும் நோயின் தன்மையறியப் பெரிதும் உதவும்; ஏனெனில் அநேகமாக எல்லா வகையான பிணியாலும் இரத்த ஓட்டம் மாறுதலடைகிறது.

ஆகவே, அணுசக்தியின் ஆதரவால் அதிசயிக்கத் தக்க புதுமுறைகள் தோன்றுவதால் புற்றுநோய் போன்ற தீராத நோய்களும் தீரும் காலம் விரைவில் கைகூடும்.

கொள்ளையரைப் பிடிக்க 12 போலீஸ் பட்டாளங்கள்

குவாலியரில், பிரபலமான கொள்ளைத் தலைவனும், அவனது கொள்ளைக் கூட்டத்தினரும் தற்போது மறைந்து கொண்டுள்ளதாகக் கூறப்படும் மலைப் பள்ளத்தாக்கு ஒன்றை உத்திர பிரதேசம், மத்திய பாரத் ஆகிய மாநில போலீசைச் சேர்ந்த 12 பட்டாளங்கள் வளைத்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

மான்சிங்கையும், அவனது குழுவினரையும் போலீசார் துரத்திவருகிறார்களென்றும், இப்போது அக்கொள்ளையர் அனைவரும் மேற்குறிப்பிட்ட மலைப் பள்ளத்தாக்கில் ஒளிந்துகொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

****** **

தி. மு. கழகக் கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர், பேரூர்க் கிளை [சிறிய-பெரிய பஞ்சாயத்து (Minor-Major Panchayat) ஆட்சிப்பகுதி] —நகரக் கிளை [நகர மன்ற (Municipality) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக்கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும், அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்து கொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிப்படுத்திக்கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினர்களாய் இருந்துவருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பதுஇரண்டு திங்கள்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. 1—3—55-ஆம் நாளுக்கு மேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. 1—3—55-க்குப் பிறகு அமைக்கப்பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்துகொள்ளப்படமாட்டா. புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப்பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27—3—55-ல் தேர்தல் நடத்தித் தேர்தலின் முடிவுகளை, தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும் "கிளைக்கழகப் பதிவுச் சீட்டி"ல் தெளிவாகக் குறித்து 31—3—55-ம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால்தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக்கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.

27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்தவேண்டிய மாவட்டங்கள்:

- சென்னை
- செங்கற்பட்டு
- தென் ஆற்காடு
- வட ஆற்காடு
- சேலம்
- கோவை
- தஞ்சை
- திருச்சி
- மதுரை
- இராமநாதபுரம்
- திருநெல்வேலி
- நாஞ்சில்
- கேரள, ஆந்திர, கர்நாடகப் பகுதிகள்

தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
5. சிற்றூர் — பேரூர் — நகரம் — சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municipal Wards) இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டியதில்லை. நகரக் கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ள வேண்டும். நகரக் கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக் கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின்கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]
6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
7. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக் கிளை அந்தந்த நகர மக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பி வைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்தி வைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பி வைக்கலாம்.
10. தேர்தல் நடைபெறும் போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானுல், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயல வேண்டும். அவசியமானுல் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.
11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்ட வேண்டும்.
12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின்மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர்

'அறிவகம்', சென்னை.
5—3—55

****

மேற்கு வங்க—அசாம் இரயில் தொடர்பு

கி. பாகிஸ்தானை ஊடுருவிச் செல்ல முயற்சி

இரு அரசாங்கங்களிடையே பேச்சுவார்த்தைகள்

மேற்கு வங்கத்திலிருந்து அசாம் மாநிலத்திற்கு, கிழக்கு பாகிஸ்தான் வழியாக இரயில் விடுவதற்கான முயற்சிகளில் மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் மேற்கொண்டிருக்கிறாராம்.

சென்ற வாரம் அவர் புதுடில்லி சென்றிருந்தபோது அங்கு மத்திய அரசாங்க அதிகாரிகளுடன் இது பற்றி விவாதித்ததாகத்தெரிகிறது.

இப்போது இந்திய இரயில்கள் மேற்கு வங்கத்திலிருந்து கிழக்கு பாகிஸ்தானை சுற்றிக்கொண்டு, அசாமுக்குச் செல்கின்றன. நேர் வழியாக இரயில்கள் செல்ல, கிழக்கு பாகிஸ்தானில் நுழைய வேண்டியுள்ளது. இரண்டு வங்கங்களிடையே வர்த்தகம் பெருகவும், எல்லையில் உள்ள இருசாராரின் மைனாரிட்டிகளுக்குநம்பிக்கை ஏற்படவும், இந்த இரயில் போக்குவரத்து பலன்தரும் என்றும் டாக்டர் ராய் நம்புகிறாராம்.

பாக். கவர்னர்-ஜெனரலைதேவையான வசதிகளுக்கான ஏற்பாடுகளை உண்டுபண்ணித் தருமாறு டாக்டர் ராய் கேட்டுள்ளாராம்.

இதுபற்றி டாக்டர் ராய், பாகிஸ்தான் செய்திப் போக்குவரத்து மந்திரி டாக்டர் கான் சாகிபுடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ளாராம். இவை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளன. இந்திய இரயில்வே அதிகாரிகளும், பாக். செய்திப் போக்குவரத்து மந்திரி சபை அலுவலகத்தாரும் இதுபற்றி சந்தித்துப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

திட்டத்திலா? நடைமுறையிலா?

இந்திய சர்க்கார், மாதம் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 1,500 - வரை வருமானம் உள்ளவர்களுக்கென வீடுகள் கட்டித் தர உத்தேசித்துள்ளதென்று டெல்லி மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தில் சேருவதற்கு வருமான வரம்பு இருக்கவேண்டுமா என்பன போன்ற விஷயங்கள் யாவும் இன்னும் இறுதியாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும், குறைந்த வருமானமுடையவர்களுக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தை கிராமப் பிரதேசங்களுக்கும் விரிவாக்கலாம் என்றும், முதலில் இடநெருக்கடி அதிகமாக உள்ள பிரதேசங்களிலேயே வீடுகள் கட்டப்பட வேண்டுமென மாநில சர்க்கார்களுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்றும் மராமத்து இலாகா அமைச்சர் சொர்ணசிங் தெரிவித்திருக்கிறார்.

பக்ரா—நங்கல் பகுதியில்

உர உற்பத்தித் தொழிற்சாலை

பக்ரா—நங்கல் அணைக்கட்டுப் பிரதேசத்தில் ஒரு உர உற்பத்தி சாலையை நிறுவுவது பற்றி மத்திய அரசாங்கம், உர உற்பத்திக் குழு செய்த இடைக்கால சிபாரிசு ஒன்றை ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

ஆண்டுதோறும் 2 லட்சம் டன் அமோனியம் நைட்ரேட், அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகுமாம்.

அந்த உரத்தில் நைட்ரேட் சத்து மட்டும் 70 ஆயிரம் டன் இருக்குமென்றும், இது சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலையில் தயாராகும் அளவு என்றும் தெரிய வருகிறது.

சில நாட்களுக்குமுன், சிந்திரி தொழிற்சாலையைப்போலவே பம்பாயிலும் ஒரு தொழிற்சாலை நிறுவ உத்தேசிக்கப்பட்டதாக ஒரு செய்தி வந்துள்ளது.

அய்யப்பனுக்கு வடநாட்டில் கிளைகளாம்!

வரும் மே மாதத்தில் அரித்துவாரில் சபரிமலை 'அய்யப்பன்' சிலை ஒன்று நாட்டப்படவிருக்கிறதாம்.

தென்னாட்டுத் தெய்வ(!)மான இந்த அய்யப்பனுக்கு வடநாட்டில் எழுப்பப்படும் ஆலயங்களுள் இது இரண்டாவதாம்.

விஷ்ணு, சிவன், லட்சுமி, பார்வதி, கணேசன், அனுமான் ஆகிய வேறு ஆறு தெய்வங்களுடனும் அய்யப்பன் புதிய கோவில் ஒன்றில் குடியேறுவாராம்.

இந்தத் தெய்வங்களின் சிலைகள் தங்கம், வெள்ளி, ஈயம், பித்தளை, இரும்பு ஆகிய பஞ்ச உலோகங்களாலும் வடிக்கப்பட்டு, திரு-கொச்சியிலிருந்து அரித்துவாருக்கு ஒரு விசேட இரயிலில் எடுத்துச் செல்லப்படுமாம்.

வடநாட்டில், அய்யப்பனுக்கு முதல் கோவில் காசியில் 1952-ல் கட்டப்பட்டது.

வட திரு-கொச்சியில் உள்ள சபரிமலையில்தான் இந்த அய்யப்பன் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளான் என்பது வாசகர்கள் அறிந்ததுதானே!

சபரிமலை விமோசனந்த் என்ற சாமியாரின் பெருமுயற்சியாலேயே அய்யப்பனுக்கு வடநாட்டில் இந்த இரண்டு கோவில்களும் எழுப்பப் பட்டுள்ளனவாம்.

நர்சுகளுக்கு சம்பள விகிதம்

விசாரணைக் குழு சிபாரிசு

நர்சிங் தொழில்பற்றி விசாரணை செய்ய சென்ற மே திங்களில் இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழு, நர்சுகளுக்கு மாதச் சம்பளம் ரூ. 100 முதல் 150 வரையிலும் இருக்கவேண்டுமெனவும்; குறைந்த பட்ச சம்பளம்—ஆடைகள், சாப்பாடு, உறைவிடம் இவற்றிற்கான படிகளுடன்—ரூ. 75 முதல் ரூ. 125 வரை இருக்கவேண்டுமெனவும் சிபாரிசு செய்திருக்கிறது.

தாதிகளுக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 75 தரப்பட வேண்டுமென்றும், குறைந்த பட்ச ஆரம்பச் சம்பளம் — யூனிபாரம் படி ரூ. 10 மற்றும் இவைபோன்ற செலவுகளுடன்—ரூ. 50 ஆகக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் சிபாரிசு செய்துள்ளது.

'ஹோலி' அடிதடி!

போபால், மார்ச் 14—

'ஹோலி'ப் பண்டிகையின் கடைசி தினத்தன்று சாயம் ஊற்றியதுபற்றி இரு சமூகத்தவரிடையே எழுந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்த அடிதடியின் விளைவாக பலருக்குப் படுகாயம் ஏற்பட்டது என்றும், அதை ஒட்டி 15 பேர் வரை போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிகிறது.

ஆந்திரப் பிரிவினையால் ஆட்குறைப்பாம்!

ஆந்திர மாநிலப் பிரிவினையின் காரணமாக வேலையிலிருந்து குறைக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்களின் எண்ணிக்கை 700 என்றும், இதன் காரணமாக சர்க்காருக்கு அரை ஆண்டில் மிஞ்சிய தொகை ரூ. 7,14,600 என்றும் சென்னை சட்டசபையில் தகவல் தரப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

கீரமங்கலம்

பழைய சினிமா கொட்டகை அருகில்

17—3—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு

தலைவர்: கோ. ப. சுப்பையா

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
மா. மணிமொழி
கே. சு. அடைக்கலம்

★

சு. வாளவெட்டி

17—3—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஆர். கோவிந்தசாமி

பேசுபவர்:

ப. உ. சண்முகம்

ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டங்கள்

★

பம்பாய்

தாராவி, வ. உ. சி. திடலில்

20—3—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு

தலைவர்:

சி. த. மு. இர. ஆரியசங்காரன்

பேசுவோர்:

த. மு. பொற்கோ
தனிக்கோடி
புத்தரசு
எஸ். வள்ளிநாயகம்
சண்முகம்

★

ஆமதாபாத்

20—3—55 மாலை 5 மணிக்கு, மணிநகர் சால் திடலில், மேற்படி கண்டனக் கூட்டம் நடைபெறும். தி. மு. கழகத் தோழர்கள் பலர் பேசுவர். நரோடாவிலிருந்து சைகிள் ஊர்வலமும் உண்டு.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

மார்ச் 16: துவரங்குறிச்சி
17: கீரமங்கலம்
18: அதிராம்பட்டணம்
20: மதுரை
21: சுந்தரபாண்டியம்
22: சமயநல்லூர்
23: கம்பம் (மதுரை மாவட்டம்)

குறள் வகுப்பு

16—3—55 மாலை 6 மணிக்கு தொண்டைமண்டலம் வேளாளர் சங்கத்தில் (எண் 100, வெள்ளாழ தெரு, புரசை, சென்னை) தோழர் க. அன்பழகன் குறள் வகுப்பு நடத்துவார்.

திருமணம்

தோழர் மு முருகேசன்—தோழியர் அர. சரோஜா சீர்திருத்த வாழ்க்கை ஒப்பந்த விழா 17-3-55 காலை 9-30 மணிக்கு திண்டிவனம் கலெக்டர் ஆபீசர் ரோடு, இராசா குளக்கரை மணமகன் இல்லத்தில், தோழர் எம். கே. கண்ணன் தலைமையிலும், சி பி. சிற்றரசு முன்னிலையிலும் நடைபெறும்.

விளைச்சலை அதிகமாக்க அணுக்கதிரியக்கம்!

அணுசக்தியைக் கொண்டு விளைச்சலை அதிகமாக்க முடியும் என்பது ரஷ்யாவில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதின் மூலம் தெரியவருகிறது.

சோவியத் விஞ்ஞானிகள், அணுக்கதிர் என்று கருதப்பட முடியாத அவ்வளவு பலவீனமான அணுக்கதிர் இயக்கத்தை நீண்ட நேரம் பிரயோகித்ததில், செடிகள் கனிவது துரிதமாகியுள்ளதுடன்; இருமடங்காகவும் பெருகியதாம்!

அனேகமாக சீக்கிரமே பருத்திச் செடிகள் அணுக்கதிரியக்கத்திற்குள்ளாக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஒரு சினிமா நடிகைக்கு இரண்டரை இலட்சம் பவுனு?

அவருக்கு இயற்கை தந்த பரிசுக்கா இப்பெருந் தொகை?

டாக்டர்களுக்கும், நிபுணர்களுக்கும் கூட இத்தகு வருமானம் இல்லையே!

'மகா ஒழுக்கக்கேடு' என்கிறது இத்தாலி இதழ்

ஜினா லோலோ பிரிகிடா என்பவர் இத்தாலிய சினிமா நடிகைகளில் தலைசிறந்து விளங்குபவராவர். அந்த நடிகையால் இத்தாலிக்குப் பெரும் புகழ் கிடைத்திருக்கிறது.

மூன்றாவது ஒரு படத்தில் நடிக்க அந்த நடிகை 2,50,000 பவுன் கேட்டார். இக்கோரிக்கையைக் கேள்வியுற்ற இத்தாலி இதழான ஆசர் வேடோர் கோமனோ என்ற பத்திரிகைக்கு அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. மேற்படி நடிகையின் கோரிக்கையை 'மகா ஒழுக்கக் கேடு' என சித்தரித்துக் கண்டித்து எழுதி இருக்கிறது.

கல்வி, அறிவு ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதற்குப் பதிலாக, அந்த நடிகைக்கு இயற்கை அளித்துள்ள பரிசைக் கொண்டு மதிப்பிடும் நவீனப் போக்கை அவ்விதழ் கண்டித்திருக்கிறது.

அதே நேரத்தில் அந்த நடிகையினால் இத்தாலி பெற்றுள்ள சிறப்பை விளக்கிக் காட்டி, 'இத்தாலியப் புகழின் நடமாடும் சின்னம்' என ஜினாவைப் பாராட்டியும் இருக்கிறது.

டாக்டர்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் பெற்றுவரும் குறைந்த ஊதியத்தை மேற்படி நடிகையின் வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஒருவருக்கு மூச்சுத் திணறிவிடும் எனவும் அவ்விதழ் எழுதுகிறது.

'உணவு, காதல், கனவு' என்ற தலைப்பில் முதல் படத்திற்கு 18 ஆயிரம் பவுன்களும், 'உணவு, காதல், பொறாமை' என்ற இரண்டாம் படத்திற்கும் அதே அளவு தொகையும் கேட்ட அந்த நடிகை அதே தொடரில் தயாராகும் படத்திற்குத்தான் $2\frac{1}{2}$ லட்சம் பவுன் கேட்டாராம்.

சென்னை நகரசபையின் ஏமாற்றம்?

மத்திய சர்க்கார் கைவிரிப்பு

ரூ. 4 கோடி 19 லட்சம் செலவில் சென்னை நகரசபை, சேரி அபிவிருத்திக்கென வகுத்திருந்த 'விரிவான' திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்படலாமென சென்னை சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

சென்னை நகரசபை இத்திட்டத்தைத் தயாரிக்கும்போது, இத்திட்டம் நிறைவேற்றப்பட மத்திய, மாநில சர்க்கார்களிடமிருந்து 'வேண்டிய அளவு' மானியங்களும், கடன்களும் கிடைக்கலாமென எதிர்பார்த்தது.

ஆனால், இறுதியில் மத்திய சர்க்காரோ, சேரி அபிவிருத்திக்கென மானியத் தொகை எதுவும் தர இயலாதெனவும், 'வட்டியுள்ள கடன்' மட்டும்தான் தரமுடியுமெனவும் கூறிவிட்டது. அதுபோலவே சென்னை மாநில சர்க்காரும், தனக்கிருக்கிற தற்போதைய நிதி நிலைமையில் நிதி உதவக்கூடிய வசதி எதுவும் இல்லையெனவும் கூறிவிட்டது.

இதன் காரணமாகவே அத்திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்படலாமென சர்க்கார் கூறியிருக்கிறது.

மத்திய சர்க்கார் போக்குக்கு கண்டனம்

அமெரிக்க செய் இறக்குமதி செய்யப்படுவதற்கு இந்திய சர்க்கார் முடிவு செய்ததனைக் கண்டித்து, சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய செய், வெண்ணை வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

பந்தயம் கட்டியதால் வந்த வினை!

நகரசபை உறுப்பினர் பதவியைத் துறந்தார்!

இந்துப்பூர், மார்ச் 13—

இங்குள்ள நகரசபை உறுப்பினரும், பி. சோ. கட்சி உறுப்பினருமான கே அனந்தராமையா என்பவர், தேர்தல் சம்மந்தமாகத் தாம் செய்துகொண்ட ஒரு பந்தயத்தில் தோல்வியுற்றதால் தமது நகரசபை உறுப்பினர் பதவியை இராஜினமா செய்துவிட்டதாகத் தெரியவருகிறது

அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரம் ஒன்றின்போது, காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தமக்கு விடப்பட்ட சவாலை ஏற்றுக்கொண்டதின் விளைவே இந்த இராஜினமாவுக்குக் காரணமாம்

அத்தொகுதியில் நடைபெற்ற தேர்தலின்போது, பி. சோ கட்சி உறுப்பினர் வெற்றி பெற்றால் தாம் தமது நகரசபை உறுப்பினர் பதவியை விட்டுவிடுவதாக ஒரு காங்கிரஸ்காரரும், காங்கிரஸ் உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற்றால் தமது பதவியை இராஜினமா செய்துவிடுவதாக மேற்குறிப்பிட்ட பி சோ. கட்சி உறுப்பினரும் தங்களுக்குள் சவாலும், எதிர்ச்சவாலும் விட்டுக்கொண்டனர்.

தேர்தல் முடிவின்போது, பொது இடத்திலும், ஒதுக்கப்பட்ட இடத்திலும் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றமையால் கே அனந்தராமையா என்ற அந்த பி. சோ. கட்சி உறுப்பினர், செய்துகொண்ட ஒப்பந்தத் திற்கிணங்க தமது நகரசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டாராம்!

தற்காப்பா?

அமெரிக்கா மீது அணு அல்லது நீர்வாயுக்குண்டு தாக்குதல் ஏற்படும் ... அவற்றினின்றும் காப்பாற்றிக்கொள்ள அணுகுண்டு தற்காப்பு நிலையங்கள் (ஷெல்டர்கள்) கட்டிக்கொள்ளுமாறு அமெரிக்க சிவில்பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் பெனெட் இராணுவக் குழுவிடம் கூறியிருக்கிறார்.

இத்தகைய பாதுகாப்பு நிலையங்களில் 5 அல்லது 6 தினங்களுக்குப் போதுமான உணவும், தண்ணீரும் சேமித்து வைக்க வேண்டுமெனவும், மேற்படி அணு அல்லது நீர்வாயுக் குண்டு தாக்குதல்களெல்லாம் எப்போது நேரிடும் என்று யாராலுமே கூற முடியாதெனவும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிய அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இ. எஸ். துன்னோர், ...